




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்








Vol: 02 | Issue: 334 | 4 Pages | 29.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 334 | 4 பக்கங்கள் | 29.6.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை**

**விளக்கம்:**
**தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிச் செல்வதாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்காகத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது.**

## ஈரான் தாக்குதலில் இஸ்ரேலுக்கு ரூ.1 லட்சம் கோடி அளவுக்கு சேதம்



டெல்அவிவ், ஜூன் 29

ஈரானுடன் நடந்த போரில் இஸ்ரேலுக்கு ரூ.1 லட்சம் கோடி அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஈரான்அணுஆயுதங்களை தயாரிப்பதாகவும், அது தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கூறி, அந்நாட்டின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரான் நாட்டின் முக்கிய அணு மையங்கள் தகர்க்கப்பட்டதுடன், அணுஆயுத விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி அளிக்கும் விதமாக ஈரானும் தாக்குதல் நடத்தியது. இந்ததாக்குதலில்இஸ்ரேலின்முக்கியநகரங்கள்கடும்சேதமடைந்தன. குறிப்பாக இஸ்ரேலின் வான் கவச பாதுகாப்பை மீறி ஈரான் தாக்குதல் நடத்தியது அந்நாட்டை அதிர்ச்சியடையச் செய்தது.இந்நிலையில், ஈரான் 'தாக்குதலில் இஸ்ரேலுக்கு ரூ.25 ஆயிரம் கோடி மதிப்புக்கு சேதம் ஏற்பட் டுள்ளதாக அந்நாட்டின் வரித்துறை இயக்குநர் ஷே அகரனோவிச் தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர்கூறுகையில், நாடு தற்போது மிகப் பெரிய சவாலை சந்தித்து வருகிறது. இஸ்ரேலின் வரலாற்றில் இதுபோன்ற சேதத்தை நாடு இதுவரை சந்தித்ததில்லை. ஈரான் தாக்குதலில் சேதமடைந்த கட்டிடங்க ளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் ரூ.25 ஆயிரம் கோடி மதிப்பில் சேதம் ஏற்பட்டு உள்ளது என்று தெரிவித்தார்.எனினும் சேதமடைந்த இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் ஆயுதங்களை கணக்கெடுத்தால் சேத மதிப்பு கூடுதலாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இஸ்ரேல் நிதி மந்திரி பெசாலல் ஸ்மோட்ரிச் கூறுகையில், போரின் காரணமாக இஸ்ரேலுக்கு ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சாலை விபத்தில் அரசு ஊழியர்கள் 7 பேர் பரிதாப பலி

மணிலா, ஜூன் 29

மத்திய பிலிப்பைன்ஸில் உள்ள நீக்ரோஸ் ஆக்சிடென்டல் மாகாணத்தின் சிலாய் நகர அரசாங்கத்தின் அனைத்து ஊழியர்களும், சுற்றுச்சூழல் நடவடிக்கையாக மரம் நடும் நிகழ்வில் கலந்துகொண்டனர். பின்னர் மினி டெம்போ லாரியில் திரும்பிக் கொண்டிருந்தனர். லாரியானது பரங்கே குய்ம்பலானில் உள்ள ஒரு கான்கிரீட் சாலையில் சென்றுகொண்டிருந்தது.

அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக வாகனத்தின் ஸ்டீயரிங் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்ததாகத் தெரிகிறது. இதனால் லாரி சாலையில் கவிழ்ந்தது. இதில் எதிர்பாராதவிமாக 7 உள்ளூர் அரசாங்க ஊழியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். அவர்களில் 5 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணை நடந்து வருகிறது.

## திடீர் வெள்ளம்.. ஒரே குடும்பத்தை சேர்ந்த 18 பேர் ஆற்றில் அடித்து செல்லப்பட்ட பரிதாபம்



கராச்சி, ஜூன் 29

பாகிஸ்தானின் கைபர்பக்துன்க்வா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் ஸ்வாட் எனும் ஆறு பாய்ந்தோடுகிறது. வற்றாத ஜீவ நதி என அழைக்கப்படும் இந்த நதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 18 பேர் குளிப்பதற்காக வந்துள்ளனர். அப்போது ஆற்றில் திடீரென வெள்ளம் ஏற்பட்டது.

இதை அறிந்து அவர்கள் ஆற்றை விட்டு வெளியேறுவதற்குள் வெள்ளம் அவர்களை சூழ்ந்துகொண்டது. இதனால் கரைக்கு திரும்ப முடியாமல் ஆற்றில் நடுப்பகுதியில் அவர்கள் சிக்கிக்கொண்டனர். ஒரு கட்டத்தில் 18 பேரையும் ஆற்று வெள்ளம் அடித்துச்சென்றது.

இதுகுறித்து தகவல் அறிந்த மீட்புப் படையினர், ஆற்றின் வெவ்வேறு இடங்களில் அவர்களை தேடினர். இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், இதுவரை 9 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. நல்வாய்ப்பாக 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

ஆற்றில் குளிக்கவும், கரைக்கு செல்வதற்கும் உள்ளூர் நிர்வாகம் தடை விதித்து இருந்தும் இந்த துரதிர்ஷ்ட சம்பவம் நடந்துள்ளது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மீட்புப் பணிகளில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது." என்றார். சுற்றுலா வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 18 பேர் ஆற்றில்சிக்கி, அதில்பலர்பலியானசம்பவம்அப்பகுதியில்சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் நாட்டிற்கே வழிகாட்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை திட்டங்கள்: ரூ.8000 கோடியில் 20,000 கி.மீ நீள கிராமச் சாலைகள்

சென்னை, ஜூன் 29

கலைஞர், தமிழக சட்டப்பேரவையில் 197172ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்த போது,"நகர்ப்புரங்களின் வசதி வாய்ப்புகளை கிராமப்புரத்து மக்கள் பெற்றிட வேண்டும் என்னும் குன்றா ஆர்வத்துடன் இந்த அரசு செயல்படும்" என்று குறிப்பிட்டு கிராமப்புர வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினார்கள். கலைஞர் வழியில்முதல்வர்மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் கிராமப்புரங்களின் முன்னேற்றத்திற்காக சாலைகள், குடிநீர் திட்டங்கள், குடியிருப்புகள், பெரியார்நினைவு சமத்துவபுரம், முதலான பல்வேறு முற்போக்கு திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.இந்ததிட்டங்கள் இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகள் சுயமாக செயல்படவும், மேலிட அனுமதிகளை பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்திடவும் கிராம ஊராட்சிகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ.2 லட்சம் என்பதை ரூ.5 லட்சம் ஆகவும்; வட்டார ஊராட்சிக்கான அனுமதி வரம்பு ரூ.10 லட்சம் என்பதை ரூ.20 லட்சம் ஆகவும்; மாவட்ட ஊராட்சிகளுக்கான அனுமதி வரம்பு ரூ.20 லட்சம் என்பதை ரூ.50 லட்சம் ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களை ஒட்டியுள்ள 690 ஊராட்சிகளுக்கு, தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.69 கோடியும் மலைப் பிரதேசங்களிலுள்ள 278 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.30 கோடியும் சிறப்பு மானியமாக வழங்கப்பட்டு இந்த ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஊராட்சிகளின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், பிற துறைகளுடன் ஊராட்சிகள் ஒருங்கிணைந்து செயல்படவும் 600 கிராம செயலகங்கள் கட்டுவதற்கு அரசாணை வழங்கப்பட்டு, 600 கிராம செயலகங்களுக்கான கட்டுமான பணிகளும் நிறைவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டமானது, ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக 100 நாட்களுக்கு திறன் சாரா வேலை வாய்ப்பினை வழங்க உறுதிசெய்கிறது.இந்ததிட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 202122 ம் ஆண்டில் 88,269 மாற்றுத் திறனாளிகளுக்கும், 202223ம் ஆண்டில் 98,567 மாற்றுத்திறனாளிகள் என எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும், 202324ம் ஆண்டில் 1,16,622 மாற்றுத் திறனாளிகளுக்கும், 202425ம் ஆண்டில் 1,12,019 மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைகள் வழங்கி தேசிய அளவில் முதலிடங்கள் பெற்று தமிழ்நாடு பாராட்டுகளை பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல; 202122ம் ஆண்டு முதல் தொடர்ந்து பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கியதிலும் தேசிய அளவில் 3ம்இடம்பெற்றுள்ளது.அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் 202122 முதல் 202425 வரை 10,187 கிராம ஊராட்சிகளில் 69,760 பணிகள் ரூ.4,277.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் 7,924 நூலகங்கள் ரூ.176.02 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. ஊரக பகுதிகளில் 3,194 சிறுபாசன ஏரிகள் ரூ.213.07 கோடி மதிப்பீட்டில் மாநில நிதி மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகளின் மூலம் 706 சிறுபாசன ஏரிகள் ரூ.45.39 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டு திட்டம் 202223ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.



முதல்வர், ரூ.8,000 கோடி செலவில் 20,000 கிலோமீட்டர் கிராமப்புர சாலைகளை மேம்படுத்த அனுமதி அளித்துள்ளார். இதுவரை, 12,572 கிலோமீட்டர் நீளமுள்ள 9,696 சாலைகள் ரூ.4,609 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 6,671 கி.மீ சாலைகள் ரூ.3,529 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தில் ஒன்றிய அரசு 60 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம் என்ற நிதிப் பகிர்வுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், 4,182 கிலோ மீட்டர் நீளமுள்ள 947சாலைப்பணிகளும் 83 புதிய பாலங்களும் ரூ.3,061 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ், 505 கி.மீ. நீளமுள்ள 283 சாலைகள் மற்றும் 308 பாலங்கள் ரூ.1,182 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் 678.62 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.267 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1,990 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் ரூ.627 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாநில சிறப்பு நிதியின் கீழ் 34 உயர்மட்ட பாலங்கள் 18 மாவட்டங்களில் ரூ.177.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

இப்படி, முதல்வர் மு.க.ஸ்டாலின் 2021ல் ஆட்சி பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை உயர்த்தி நிலைநிறுத்திடும் உன்னத லட்சியத்துடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாகத் தமிழ்நாட்டில் நிறைவேற்றி வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், நமக்கு நாமே திட்டம், சுகாதார திட்டங்கள், குடிநீர் இணைப்பு திட்டம் முதலான பல்வேறு திட்டங்களால் தமிழ்நாட்டின் கிராமப்புரங்கள், நகர்ப்புரங்களுக்குஇணையாகவளர்ச்சிபெற்று இந்திய மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக திகழ்கிறது. ஒன்றிய அரசின் விருதுகளையும், பத்திரிகைகளின் பாராட்டுகளையும் தொடர்ந்து பெற்று வருகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

# நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் அமைகிறது டைடல் பார்க்... 6,000 பேருக்கு வேலைவாய்ப்பு

தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் மாவட்டமான நாமக்கல்லில் தொழில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், டைடல் பார்க் அமைய உள்ளது.


இதன் மூலம் 6,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் மாவட்டமான நாமக்கல்லில் தொழில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், டைடல் பார்க் அமைய உள்ளது. இதன் மூலம் 6,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் வளர்ச்சி

நாமக்கல் மாவட்டம் முட்டை உற்பத்தியில் உலக அளவில் முன்னிலை வகிக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நாமக்கல் முட்டைக்கு பலரும் அடிமை என்றே கூறலாம். இதே போல நாமக்கல்லில் தொழில் வளர்ச்சியும் செழித்து விளங்குகிறது. லாரி பாடி கட்டுவது, சரக்கு வாகன போக்குவரத்து என பல தொழில்களில் நாமக்கல் முன்னிலையில் இருக்கிறது.

ஐ.டி. நிறுவனம் இல்லாத குறை இது மட்டுமல்ல, கல்வியிலும் நாமக்கல் தலைசிறந்து விளங்குகிறது. தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்து பலரும் நாமக்கல் நோக்கி மேற்படிப்புக்காக வருகின்றனர். ஆண்டுதோறும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 10, 12ஆம் வகுப்பு மாணவர்கள் மாநில அளவில் முன்னிலை வகிக்கின்றனர். இருப்பினும், நாமக்கல்லில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இல்லாதது ஒரு பெரிய குறையாக இருந்தது.

டெண்டர் வெளியீடு அதை போக்கும் வகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன்படி நாமக்கலில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் பார்க் ஏற்படுத்தப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார். இதற்கு நாமக்கல்லைச் சேர்ந்த எம்எல்ஏக்கள் மேசையைத் தட்டி வரவேற்பு அளித்தனர். அந்தவகையில் டைடல் பார்க் அமைப்பதற்கான ஒப்பந்த புள்ளியை தமிழக அரசு வெளியிட்டது.



அரசு கலைக் கல்லூரி வளாகத்தில்...

மேலும் நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் 63,333 சதுர அடி பரப்பில், 3 மாடி கட்டடத்துடன் டைடல் பார்க் அமைப்பதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதற்கான டெண்டர் (ஒப்பந்தப்புள்ளி) தற்போது வெளியிடப்பட்டு இருக்கிறது.இந்தடைட்டல்பார்க்திறக்கப்படும் பட்சத்தில்,நாமக்கல்மற்றும்சுற்றுவட்டாரத்தை சேர்ந்த மாவட்ட மக்கள் இனி வேலை தேடி சென்னை, கோவை, பெங்களூர், மும்பை என வெளியூர் செல்ல வேண்டியதில்லை.

தொழில் வளர்ச்சி பெறும் நாமக்கல்லிலேயே நல்ல சம்பளத்துடன் வேலைக்கு சேரலாம். கைநிறை சம்பாதிக்கலாம். இதன் மூலம் நாமக்கல் மாவட்ட இளைஞர்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சேலம் அருகே சமீபத்தில மினி டைடல் பார்க் திறந்து வைத்தார். தற்போது சேலம் நாமக்கல் இடையில் ராசிபுரத்தில் மற்றொரு டைடல் பார்க் அமையும் நிலையில், இந்தப் பிராந்தியத்தில் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் எனதமிழக அரசு தெரிவித்துள்ளது.

25 கி.மீ. தொலைவில் 2 டைடல் பார்க் அதிலும்வெறும்25கிலோமீட்டர் தொலைவில் 2 டைடல் பார்க்குகள் அமைகின்றன. ராசிபுரம் டைடல் பார்க் மூலம் 6 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசானது இரண்டாம் நிலை நகரங்களை தரம் உயர்த்துவதில்தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே தஞ்சாவூர், நெல்லை போன்ற நகரங்களிலும் டைடல் பார்க் அமைக்கப்பட்டு, ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. இதே போல நாமக்கல்லிலும் அமைவதால், இனி இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக குடும்பத்தைப் பிரிந்து கஷ்டப்பட வேண்டிய தேவையில்லை.




# தூத்துக்குடியில் ஒப்பந்த தொழிலாளி மரணம்: உரிய நிவாரணம் வழங்க வலியுறுத்தி சிஐடியு ஆர்ப்பாட்டம்



தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் நேற்று பகலில் கறி கன்வர் பெல்டில் பணியாற்றிய மனோகரன் (வயது 35) என்ற ஒப்பந்த தொழிலாளி கொடூரமாக மரணம் அடைந்துள்ளார். அவரது குடும்பத்திற்கு உரிய இழப்பீடும் நிவாரணமும் வழங்க வேண்டும். அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும். பணியிடத்தில் பாதுகாப்பு சூழலை அதிகப்படுத்த வேண்டும். பாதுகாப்பு குறைபாட்டை சரி செய்ய வேண்டும். பாதுகாப்பு குறைபாட்டுக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தெர்மல் செயலாளர் கணபதி சுரேஷ் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் சிஐடியு மாநில செயலாளர் ரசல், மாவட்ட தலைவர் பேச்சிமுத்து, மூத்த தோழர் பொன்ராஜ்,

மின்ஊழியர் மத்திய அமைப்பு மாநில நிர்வாகி அப்பாதுரை, சிஐடியுமாவட்டநிர்வாகிகள் ரவிதாகூர், தெர்மல் சங்க தலைவர் சுடலைமுத்து, துணைத்தலைவர் கிருஷ்ணகுமார், தெர்மல் ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டு கோஷமிட்டனர்.

# அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்வி முன்பணம் உயர்வு: அரசாணை வெளியீடு

சென்னை, ஜூன் 29

தமிழக அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் உயர்கல்வியில் சேர்வதற்கான முன்பணத்தை அரசு வழங்கி வருகிறது. அந்த வகையில் தொழில்கல்வியில் சேர ரூ.50 ஆயிரமும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் நிறுவனங்களில் சேர ரூ.25 ஆயிரம் என கல்வி முன்பணம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த சட்டசபைகூட்டத்தொடரில் அவை விதி 110ன் கீழ் அறிவிப்பு ஒன்றை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயிலும்வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டில் இருந்து உயர்த்தப்படுகிறது.

அதன்படி, தொழில் கல்வியில் சேர ரூ.1 லட்சமும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் நிறுவனங்களில் சேர ரூ.50 ஆயிரம் என கல்வி முன்பணம் உயர்த்தி வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். இந்த அறிவிப்பை செயல்படுத்துவதற்கான அரசாணையை நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.

# தூத்துக்குடியில் காணாமல் போன விவசாயி கிணற்றில் சடலமாக மீட்பு



தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை அருகே உள்ள கே.சுப்பிரமணியபுரம் தெற்கு தெருவை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் (வயது 62). விவசாயியான இவருடைய மனைவி மல்லிகா(55). இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். ராதாகிருஷ்ணன் கடந்த சில மாதங்களாக நீரிழிவு நோய் மற்றும் 2 கண்களிலும் நீர் வடிந்து சிரமப்பட்டு வந்துள்ளார். பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் நோய் குணமாகவில்லையாம். இதனால் வாழ்க்கையில் விரக்தியடைந்த அவர், கடந்த சில நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியே சென்றவர் திரும்பவில்லை.

அவரது உறவினர்கள் அவரை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் கடந்த 22ம்தேதி மாலையில் ஊருக்கு அருகில் உள்ள தனியார் தோட்டத்து கிணற்றில் அவர் பிணமாக மிதந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த கழுகுமலை போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மாவதி மற்றும் போலீசார், தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று அவரது உடலை மீட்டு, கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கழுகுமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

# தோழி வீட்டில் 7 சவரன் நகை திருடிய பெண் கைது



சென்னை ஜூன் 29

சென்னை அண்ணாநகர் மேற்கு பகுதியை சேர்ந்தவர் மோகன். இவரது மனைவி சுமதி (வயது 55). இவர் அண்ணாநகரில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருகிறார். இவருடன் அம்பத்தூரைச் சேர்ந்த லதா(47) என்பவர் வேலை செய்து வந்தார். லதா தங்கி இருந்த அறையில் தண்ணீர் வராததால் தனது தோழியான சுமதி வீட்டில் சில நாட்கள் தங்கி இருந்தார்.

அப்போது சுமதி வீட்டின் அலமாரியில் வைத்திருந்த 7 சவரன்நகையை திருடிவிட்டு, அதற்கு பதிலாக கவரிங் நகையை வைத்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து திருமங்கலம் குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து நடத்திய விசாரணையில் தோழி வீட்டில் தங்கி இருந்த லதா, தங்க நகையை திருடி அடகு வைத்து பணம் பெற்றதும், சுமதிக்கு சந்தேகம் வராமல் இருக்க கவரிங் நகைகளை வைத்ததும் தெரிந்தது. லதாவை போலீசார் கைது செய்தனர்.

# பைக் மீது பள்ளி பேருந்து மோதிய விபத்தில் தந்தை பலி: மகள் படுகாயம்



தூத்துக்குடி ஜூன் 29

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, மடத்துப்பட்டி பகுதியை சேர்ந்தவர் உத்தரப்பன் (வயது 62). அவரது மகள் அய்யம்மாள்(40).

இருவரும் சம்பவத்தன்று கழுகுமலை அருகே உள்ள சங்கரலிங்கபுரம் கிராமத்தில் உள்ள நாட்டு வைத்தியரை பார்க்க மோட்டார் பைக்கில் சென்றனர். அங்கு சிகிச்சை முடிந்து இருவரும் ஊருக்கு மோட்டார் பைக்கில் திரும்பி சென்று கொண்டிருந்தனர்.

சங்கரலிங்கபுரம் கோவில்பட்டி சாலையில் சென்றபோது, பின்னால் வந்த கோவில்பட்டி தனியார் பள்ளிப் பேருந்து, அவர்கள் சென்ற பைக் மீது மோதியது. இதில் இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர்.

இதில் உத்தரப்பன் பரிதாபமாக உயிரிழந்தார். தகவல் அறிந்த நாலாட்டின்புத்தூர் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று, உத்தரப்பன் உடலை மீட்டு, கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

பலத்த காயங்களுடன் சாலையில் கிடந்த அய்யம்மாளை போலீசார் மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து நாலாட்டின்புத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து, பள்ளி பேருந்தின் டிரைவர் வரதராஜனிடம்(52) விசாரணை நடத்தினர்.

# பராமரிப்பு பணி: 8 ரெயில்களின் சேவையில் மாற்றம்



சென்னை, ஜூன் 29

திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தெற்கு ரெயில்வேயின் திருச்சி கோட்டத்துக்குட்பட்ட பல்வேறு இடங்களில் ரெயில்வே பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதன் காரணமாக ரெயில் போக்குவரத்து சேவையில் சில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சென்னை தாம்பரத்தில் இருந்து காலை 9.45 மணிக்கு புறப்படும் தாம்பரம்விழுப்புரம் பயணிகள் ரெயில் (வண்டி எண் 66045) வருகிற 1ந்தேதி முண்டியம்பாக்கம் விழுப்புரம் இடையே பகுதியளவில் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த ரெயில் முண்டியம்பாக்கத்துடன் நிறுத்தப்படும்.

அதுபோல் விழுப்புரத்தில் இருந்து மதியம் 1.40 மணிக்கு புறப்பட வேண்டிய விழுப்புரம்சென்னை கடற்கரை பயணிகள் ரெயில் (வண்டி எண் 66046) 1ந்தேதியன்று விழுப்புரம் முண்டியம்பாக்கம் இடையே பகுதியளவில் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த ரெயில் முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்தில் இருந்து மதியம் 1.55 மணிக்கு புறப்படும்.

மேலும் விழுப்புரம் ரெயில் நிலையத்தில் இருந்து 1ந் தேதி மதியம் 2.35 மணிக்கு புறப்பட வேண்டிய விழுப்புரம் மயிலாடுதுறை பயணிகள் ரெயில் (வண்டி எண் 66019) 30 நிமிடங்கள் தாமதமாக மாலை 3.05 மணிக்கு புறப்படும். அதுபோல் விழுப்புரம் ரெயில் நிலையத்தில் இருந்து அதிகாலை 5.25 மணிக்கு புறப்படும் விழுப்புரம்புதுச்சேரி பயணிகள் ரெயில் (வண்டி எண் 66063), புதுச்சேரி ரெயில் நிலையத்தில் இருந்து காலை 8.05 மணிக்கு புறப்படும். புதுச்சேரி விழுப்புரம் பயணிகள் ரெயில் (வண்டி எண் 66064) வருகிற 1, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய தேதிகளில் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து காலை 7.45 மணிக்கு புறப்படும் எழும்பூர்திருச்சிசோழன் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 22675) 2, 3, 4 ஆகிய தேதிகளில் வசதிக்குரிய ரெயில் நிலையத்தில் சுமார் 15 நிமிடங்களும், சென்னை எழும்பூரில் இருந்து காலை 6.35 மணிக்கு புறப்படும் எழும்பூர்புதுச்சேரி பயணிகள் ரெயில் (வண்டி எண் 66051), குருவாயூரில் இருந்து இரவு 11.15 மணிக்கு புறப்படும் குருவாயூர் சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16128) 1ந்தேதி வசதிக்குரிய ரெயில் நிலையத்தில் சுமார் 30 நிமிடங்களும் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் இயக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போலீசாருக்கு கொலை மிரட்டல்: வாலிபர் கைது

தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் சண்முகம் தலைமையில் போலீசார் இலுப்பையூரணி பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்குள்ள மாடசாமி கோயில் அருகே அரிவாளுடன் நின்று கொண்டிருந்த வாலிபரை பிடிக்க முயன்றபோது அவர் போலீசாரை அவதூறாக பேசிக் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் போலீசார் அவரை பிடித்து கிழக்கு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அதில் அவர் இலுப்பையூரணி மேட்டுத் தெருவைச் சேர்ந்த மாரிமுத்து மகன் உத்தண்டை (வயது 24) என்பது தெரியவந்தது. போலீசார் அவரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

# திருமணமான 2 மாதங்களில் வாலிபர் தற்கொலை

தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வ.உ.சி. நகர் 5வது தெருவை சேர்ந்த சண்முகநாதன் மகன் கண்ணன் (வயது 28). இவர் ஒரு பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து பெற்றோர் சம்மதத்துடன் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. கண்ணன் திருமணத்திற்கு பின்பு வேலைக்குச் செல்லாமல் இருந்தாராம், இதனால் தம்பதியிடையே தகராறு இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் கண்ணன் சம்பவத்தன்று வீட்டின் மாடியில் உள்ள ஒரு அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டாராம். இதுகுறித்து அவரது மனைவி அளித்த புகாரின் பேரில் கோவில்பட்டி மேற்கு போலீசார் சம்பவம் நடந்த வீட்டுக்கு சென்று அவரது உடலை கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

# ஜூலை 2ம்தேதி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பழைய பேப்பர்கள் ஏலம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பழைய விடைத்தாள்கள்/ Assignment பேப்பர்கள்/ பழைய Record notes/ நூலகப் பழைய தினசரி நாளிதழ்கள் சுமார் 4 டன் இருப்பில் உள்ளதால், அவற்றை கழிவுநீக்கம் செய்யும் பொருட்டு 2.7.2025 அன்று காலை 11 மணியளவில், கல்லூரி வளாகத்தில் வைத்து பொது ஏல விற்பனை நடைபெறும் எனவும் ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ரூ,1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) முன்பணமாக செலுத்த வேண்டும். அதிக தொகைக்கு ஏலம் கோரும் ஏலதாரருக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படும். அதிக விலைக்கு ஏலம் கோரும் ஏலதாரர் பொருட்களின் மொத்த விலையில் 50 சதவீதம் மற்றும் அரசு விதிகளின்படி GST சதவீத தொகையினை உடனடியாக செலுத்தினால் மட்டுமே அவருக்கு விற்பனை செய்வது உறுதி செய்யப்படும். அன்னாரின் நிரந்தர வீட்டு முகவரி இரண்டு சாட்சிகள் முன்னிலையில் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட ஏலதாரரின் விபரங்கள் அவர் ஏலம் கோரிய தொகை விவரங்கள் தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மீதித் தொகையுடன் விற்பனை வரியையும் செலுத்திய பின்னர் பொருட்களை உரிய அனுமதியுடன் எடுத்துச் செல்ல வேண்டும். பொருட்களை ஏலதாரர் அவரது சொந்த செலவில் எடுத்துச் செல்ல வேண்டும். மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பழைய அகத்தேர்வு பேப்பர்கள் மற்றும் பழைய Record notes ஆகியவற்றை சிறு சிறு துண்டுகளாக்கி பின்னரே எடுத்துச் செல்ல வேண்டும். மேற்காணும் நிபந்தனைப்படி ஏலதாரர் பொருட்களை எடுத்துச் செல்லவில்லை எனில் அவர் செலுத்திய முன்பணத் தொகையினை இழப்பார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஏலம் விடுதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் அனைத்து வழிகாட்டுதல் நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏலக்குழு நிர்ணயித்த விலையை விட, ஏலத் தொகை குறைவாக இருக்குமாயின் ஏலத்தை விடுவதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ, ரத்து செய்வதற்கோ ஏலக்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு. இப்பொருள் குறித்து ஏலக்குழு எடுக்கும் முடிவே இறுதியானது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கொடைக்கானலில் 'ரீல்ஸ்' மோகத்தில் சுற்றுலா பயணிகள் ஆபத்தான பயணம்



கொடைக்கானல், ஜூன் 29

'மலைகளின் இளவரசி'யான கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் படையெடுத்து வருகின்றனர்.

தற்போதைய காலக்கட்டத்தில் சமூக வலைத்தளங்கள் அனைவரையும் கட்டிப்போட்டுள்ளது. அதிலும் தாங்கள் செல்லும் இடங்களை வீடியோ, புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிடுவதில் பொதுமக்கள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர். அந்த வகையில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் இயற்கை காட்சிகளை கண்டு மகிழ்வதுடன், அவற்றை புகைப்படம், வீடியோ எடுத்து தங்களது சமூக வலைத்தள பக்கங்களில் பதிவிடுகின்றனர்.

இந்தநிலையில் சமீப காலமாக கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் சிலர் மலைப்பாதையிலும், நகரின் முக்கிய சாலைகளில் செல்லும்போதும் வாகனங்களில் ஆபத்தான முறையில் பயணம் செய்கின்றனர். அதாவது கார், வேன் உள்ளிட்ட வாகனங்களின் மேற்கூரை மற்றும் ஜன்னல் பகுதியில் அமர்ந்தபடி பயணம் செய்வதுடன், சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதற்காக அதனை வீடியோ எடுத்து வருகின்றனர்.

'ரீல்ஸ்' மோகத்தில் சுற்றுலா பயணிகள் செய்யும் இதுபோன்ற செயலால் பிற சுற்றுலா பயணிகள், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான பூம்பாறை, மன்னவனூர் செல்லும் மலைப்பாதையில் இளைஞர்கள் சிலர் சொகுசு காரில் சென்றனர். அப்போது அவர்களில் 3 பேர் திடீரென காரின் இருபக்கமுள்ள ஜன்னல்களில் அமர்ந்தபடி ஆபத்தான முறையில் பயணம் செய்ததுடன், அதனை 'ரீல்ஸ்' வீடியோ எடுத்தனர்.

இதனால் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் ஒருவித அச்சத்துடன் சென்றனர். மேலும் இளைஞர்கள் எடுத்த வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலானது.

இதைத்தொடர்ந்து இளைஞர்கள் சென்ற வாகன பதிவெண்ணை வைத்து 2 பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கொடைக்கானலில் இதுபோன்று ஆபத்தான முறையில் வாகனங்களை இயக்கும் வாகன ஓட்டிகள் மீதும், 'ரீல்ஸ்' மோகத்திற்காக ஆபத்தான முறையில் பயணம் செய்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கடலில் மூழ்கிய ராமேசுவரம் படகை மீட்க உதவிய இலங்கை கடற்படை

ராமேசுவரம், ஜூன் 29

ராமேசுவரம் அருகே உள்ள தனுஷ்கோடி பகுதியில் இருந்து 2 நாட்களுக்கு முன்பு நாட்டுப்படகில் பிரகாஷ், சதீஷ், குகன், நம்பு பிரகாஷ் ஆகிய 4 மீனவர்கள் மீன்பிடிக்கசென்றனர். நடுக்கடலில்மீன்பிடித்தபோது பலத்த சூறாவளி காற்று மற்றும் கடல் சீற்றத்தால் படகு கடலில் மூழ்கியது. கடலில் தத்தளித்த மீனவர்களை அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீட்டனர்.

கடலில் மூழ்கி கிடக்கும் அந்த படகை மீட்பதற்காக ராமேசுவரத்தில் மீன் துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று 3 நாட்டுப்படகுகளில் மீனவர்கள் சென்றனர். அந்த படகை மீட்க முடியாமல் திணறினர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மூழ்கிய படகை மீட்பதற்கு உதவி செய்தனர். மீட்கப்பட்ட படகுடன் ராமேசுவரம் மீனவர்கள் பாதுகாப்பாக கரை திரும்பினர்.

இலங்கை கடற்படையினரின் இந்த செயல் மீனவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. படகு மீட்கப்பட்டாலும் படகின் என்ஜின் பெரிய அளவில் சேதம் அடைந்ததால், அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்எனமீனவர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# கோவில் விழாக்களில் முதல் மரியாதை நடைமுறை சமத்துவத்துக்கு எதிரானது: சென்னை ஐகோர்ட்டு கருத்து



சென்னை, ஜூன் 29

ஈரோடு மாவட்டம், பர்கூர்கிராமத்தில் உள்ளபந்தீஸ்வரர் கோவில் மகா பெரிய குண்டம் விழாவில், முதல் மரியாதை வழங்க கோரி, தேவராஜ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், 'கோவில் வழக்கப்படி எனது குடும்பத்தினர் தலைமையில் சாமி ஊர் வலம் நடத்தப்படும். எங்கள் குடும்பத்தினருக்கு தான் முதல் மரியாதை வழங்கப்படும். அந்த வகையில் எனக்கு முதல் மரியாதை வழங்க உத்தரவிட வேண்டும்' என கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, 'பல கோவில் விழாக்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட காரணமே, முதல் மரியாதை தான். கோவில்களில் முதல் மரியாதை கேட்பதன் மூலம் கடவுளைவிட தங்களை மேலானவர்களாக காட்ட முயற்சிக்கின்றனர். இது, விழாக்கள் நடத்தும் நோக்கத்தையே வீழ்த்திவிடுகிறது.

இதுபோன்ற மரபுகள், சமத்துவத்துக்கு எதிரானது. கடவுள்முன் அனைவரும் சமம். கோவில் விழாக்களில் முதல் மரியாதை போன்ற நடைமுறைகளை நிறுத்த வேண்டும்' என தெரிவித்தார். விசாரணை முடிவில், மனுதாரரின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி வழக்கை முடித்து வைத்தார்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் அத்தியூர் திருக்கை ஊராட்சியில் இந்திராரங்கசாமி அவர்களின் கூரை வீடு மின் கசிவு ஏற்பட்டு தீப்பிடித்து எரிந்த தகவல் அறிந்த விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர்சிவா நேரில் சென்று பார்வையிட்டு வீடு இழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிவாரண பொருட்கள் வழங்கினார் உடன் காணை ஒன்றிய கழக செயலாளர்கள் கல்பட்டு வி.ராஜா,ஆர்.முருகன் வட்டாட்சியர் இளவரசன்,ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# ஜூலை 3ம்தேதி திருநெல்வேலி மாவட்ட காவல்துறையில் கழிவு செய்த வாகனங்கள் ஏலம்




திருநெல்வேலி ஜூன் 29

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்ட காவல் துறையில் 15 வருடம் பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்ட 8 நான்கு சக்கர வாகனம் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள் ஆக மொத்தம் 10 வாகனங்கள் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் வருகின்ற 3.7.2025 அன்றுகாலை10மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் வைத்து பொது ஏலத்தில் விடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஏலம் எடுக்க விரும்புவோர் 2.7.2025 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை மோட்டார் வாகனப்பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை பார்வையிட்டுக்கொள்ளலாம். மேலும் வாகனங்களைஏலம் எடுக்க விருப்பம் உள்ளவர்கள் அன்றே ரூ.2,000 முன்பணம் செலுத்தி தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

பதிவு செய்தவர்கள் மட்டுமே ஏலம் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள். ஏலம் எடுத்தவுடன் முழுத்தொகை மற்றும் அதற்குண்டான சரக்கு மற்றும் சேவை வரி (இரு சக்கர வாகனத்திற்கு 12% மற்றும் நான்கு சக்கரவாகனத்திற்கு 18%) முழுவதையும் அரசுக்கு அன்றே ரொக்கமாக செலுத்தி வாகனத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் வாகனங்கள் இயங்கும் நிலையில் இல்லை scrap பயன்பாட்டிற்கு மட்டுமே ஏலம் விடப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தடகள தங்க வீராங்கனை சாந்தி சௌந்தரராஜன் பங்கேற்ற சாரா நர்சிங் கல்லூரி விளையாட்டு ஆண்டு விழா

தாராபுரத்தில் சாரா நர்சிங் கல்லூரியின் விளையாட்டு விழா கோலாகலமாக திரு விழா போல் சிறப்பாக நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் செயல்பட்டுவரும் சாரா நர்சிங் மற்றும் சாரா நர்சரி கல்வி நிறுவனங்களின் வருடாந்திர ஆண்டு விளையாட்டு விழா மிகுந்த உற்சாகத்துடன் மற்றும் மாணவ மாணவிகளின் உறுதியான பங்கேற்புடன் நடைபெற விருது விழா போல சிறப்பு பெற்றது.

இந்த விழா, சாரா கல்வி குழும நிறுவனர் டாக்டர் எம். ஜெய்லானி அவர்களின் தலைமை வகி த்து பேசினார் . விழாவினை சிறப்பித்து சாரா நர்சிங் கல்லூரியின் சேர்மனும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியைகே. மரியம் உள் ஆசியா அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து விழா வைத் தொடங்கி வைத்தார்.

விழாவில் மேலும் சாரா நர்சரி கல்லூரி இயக்குனர் பொறியாளர் பி. எம். முகமது சதுர்தீன், துணைத்தலைவர் மற்றும் பிரபல திரை ப்பட இயக்குனர் ஹாலிதா ஷமீம், செயலாளர் பெனாசிர் பேகம், மக்கள் தொடர்பு அலுவலர் எம். சகாபுதீன், நிர்வாக அலுவலர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்புரை யாற்றினர். விழாவின் முக்கிய அம்சமாக உலக அளவில் புகழ் பெற்ற தடகளவீராங்கனை, ஆசிய போட்டி களில் தங்கப்பதக்கம் பெற்றவீராங்கனை சாந்திசௌந்தரிராசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர், நடைபெற்ற தடகள மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு விருதுகள், பரிசுகள், பதக்கங்கள் மற்றும் கோப்பைகளை வழங்கியதோடு, "விளையாட்டு மட்டுமல்ல, ஒழுக்கமும், ஒற்றுமையும் வாழ்க்கையின் அடிப்படைகள்" எனக் கூறி மாணவர்களுக்கு உற்சாக உரை நிகழ்த்தினார்.



விழாவில் நடைபெற்ற 100 மீட்டர் ஓட்டம், நீளத் தாவுதல், 400 மீட்டர் தடுப் போட்டம், குழு ரிலே ஓட்டம், கபடி, கோகோ, கிரிக்கெட் போன்ற பல் வேறு போட்டிகளில் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு திறமையை வெளிப்படுத்தினர்.

அனைத்து போட்டிகளிலும் சிறப்பாக பங்கேற்று மொத்தத்திலும் அதிக வெற்றி பெற்ற பெண் வீராங்கனை மாணவி ஹன்சிகா மற்றும் ஆண் வீரர் மாணவர் சஞ்சய் ஆகியோர் "சாரா ஸ்போர்ட்ஸ் சாம்பியன் 2025" எனும் விருதுகளைப் பெற்றனர்.

விழாவின் சாரா நர்சிங் கல்லூரி பயிற்சியாளர் குணசீலன் வரவேற்புரை ஆற்றினார். மாணவிக் கல்வி மெர்லின் ஜென்ட் நன்றியுரை ஆற்றினார்.

சாரா கல்வி குழுமத்தின் இவ்விழா மாணவர்களின் உடல்நலம்மற்றும்போட்டி மனப்பாங்கை ஊக்குவிக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரின் பாராட்டையும் பெற்றது.

# சேவைக் குறைபாடு: இன்சூரன்ஸ் நிறுவனம் பாலிசிதாரருக்கு ரூ.35,700 வழங்க தூத்துக்குடி நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு




தூத்துக்குடி ஜூன் 29

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த தெய்வேந்திரன் என்பவர் பொதுத்துறை நிறுவனத்தில் ஹெல்த் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்திருந்தார். தனது வலது கண்ணில் ரெட்டினா சிகிச்சைக்காக திருநெல்வேலியிலுள்ள தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்துவிட்டு, அதற்கு பணம் செலுத்தியுள்ளார். அதன் பின்னர் அந்த பணத்தை பொதுத்துறை இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் காப்பீடு செய்ததன் அடிப்படையில் பணத்தை தருமாறு கேட்டுள்ளார்.

அதில் ஒரு பகுதியை மட்டும் பொதுத்துறை இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. மீதி பணத்தையும் தருமாறு கேட்டதற்கு பொதுத்துறை இன்சூரன்ஸ் நிறுவனம் சரியான காரணங்களை கூறாமல் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட பணத்தை தர மறுத்துள்ளது.

இதைக் கண்ட நுகர்வோர் அதிர்ச்சியும், தாங்க முடியாத வேதனையும் அடைந்து உடனடியாக வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். ஆனால் இதன் பின்னரும் உரிய பதில் கிடைக்காததால் மன உளைச்சலுக்கு ஆளான நுகர்வோர் தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்ததூத்துக்குடிமாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் திருநீல பிரசாத், உறுப்பினர்கள் சங்கர், நமச்சிவாயம் ஆகியோர் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மீதி மருத்துவ செலவுத் தொகை ரூ.15,700 சேவை குறைபாடு மற்றும் மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு தொகை ரூ.10,000 வழக்கு செலவுத் தொகை ரூ.10,000 ஆக மொத்தம் ரூ.35,700ஐ இரண்டு மாத காலத்திற்குள் வழங்க வேண்டும். இல்லையென்றால் அத்தொகையை செலுத்தும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் வட்டியுடன் வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு வரி செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை, ஜூன் 29

வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு வரி விதிக்கப்படவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது ;

"வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு மத்திய அரசு வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளது என்ற செய்தி விவசாயிகள் சமுதாயத்திற்கு மட்டுமல்ல நமக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசின் ஜல்சக்தி துறையின் மந்திரி சி.ஆர்.பாட்டீலின் இந்த அறிவிப்புக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். நிலத்தடி நீருக்கு வரி என்பது விவசாயிகளை வெட்டும் கத்தியாகும், விவசாயம் நமது நாட்டின் முதன்மைத் தொழிலாகும்.

இப்போது இயற்கை வளமான நிலத்தடி நீரை விவசாயத்திற்கு பயன்படுத்திவரும் விவசாயிகளிடம் வரி வசூலிக்கப்படும் என்ற முடிவு, விவசாயத்துறையை அழித்து விடும். பயிர் செய்பவர் ஏற்கனவே மழை இல்லை, மின்சாரம் கட்டணம் உயர்வு, உரம் விலை உயர்வு, விளைச்சலுக்கு சரியான விலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இந்நிலையில் நிலத்தடி நீருக்கே வரி எனும் அரசு திட்டம், விவசாயியின் முதுகில் குத்தப்படும் அரிவாளாக இருக்கும். நீரே இல்லாமல் வறண்டு போகும் நிலத்தில் தன்னம்பிக்கையுடன் போராடும் விவசாயிக்கு இது மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

நிலத்தடி நீர் என்பது தனிநபருக்குரிய சொத்து அல்ல. இது அனைவருக்கும் உரிய இயற்கை வளமாகும். அதனை வரி மூலமாக கட்டுப்படுத்துவது அவர்கள் மீது திணிக்கப்படும் அராஜக செயலாகும். விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், இந்த திட்டத்தை மத்திய அரசு உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன். இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தால், விவசாய பெருங்குடி மக்களுடன் இணைந்து மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுப்போம் என்பதை தெரிவித்து கொள்கிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருச்செந்தூர் கோவில் கும்பாபிஷேகம்: வாகனங்கள் நிறுத்தும் இடங்களை எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் ஆய்வு



தூத்துக்குடி ஜூன் 29

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வருகின்ற 7.7.2025 அன்று கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் இன்று திருச்செந்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கும்பாபிஷேகத்திற்கு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும், வாகனம் நிறுத்தும் இடங்களில் இருந்து பொதுமக்கள் கோவிலுக்கு செல்லும் வழித்தடங்கள் குறித்தும் மற்றும் பக்தர்களின் அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தூத்துக்குடி மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் யாழினி உட்பட சுகாதார அலுவலர்கள் மற்றும் திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. மகேஷ்குமார் உட்பட காவல்துறையினர் உடனிருந்தனர்.

# பள்ளிகளில் சாதிய வன்முறைகளை தடுப்பதற்கான வழிகாட்டுதல் வெளியீடு



சென்னை, ஜூன் 29

பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ச. கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

பள்ளி மாணவர்களிடம் சாதிய மற்றும் சமூக வேறுபாடுகள் உணர்வுகள் அடிப்படையில் வன்முறைகள் உருவாகுவதைத் தவிர்ப்பதும், நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பதும் மிகவும் இன்றிமையாதது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தற்போது வெளியிடப்படுகின்றன.

அதன்படி 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறளை மையமாக கொண்டு நன்னெறி வகுப்புகள் வாரந்தோறும் நடத்தப்பட வேண்டும். இதுதவிர இலக்கியம், வினாடி வினா, நூலகம், வானவில் மன்றம் உள்ளிட்ட மன்றங்களில் மாணவர்கள் பங்கேற்க வழிசெய்ய வேண்டும். நாடகம், இசை, நடனம் உட்பட கல்விச் சாரா செயல்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

வகுப்பறையில் மாணவர்களை 15 நாட்களுக்கு ஒருமுறை வரிசை மாற்றி அமர வைக்க வேண்டும். மாணவர்களின் வருகைப் பதிவேட்டில் அவர்களின் சாதி தொடர்பான விவரங்கள் இடம்பெறக் கூடாது. மாணவர்களின் சாதியை குறிப்பிட்டு ஆசிரியர்கள் அழைப்பதோ, கருத்து தெரிவிக்கவோ கூடாது. மேலும், மாணவர்களின் உதவித் தொகை குறித்த விவரங்களை வகுப்பறைகளில் அறிவிக்கக்கூடாது.

அதேபோல், மாணவர்கள் தங்கள் கைகளில் வேறுபாடுகளை அடையாளப்படுத்தக்கூடிய வண்ணக் கயிறுகள், மோதிரங்கள் அணிவதற்கு தடை விதிப்பதுடன், போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்ட மாணவரை மறுவாழ்வு மையத்தில் சேர்க்க அவர்களின் பெற்றோர்களுக்கு பரிந்துரைக்க வேண்டும்.

அதனுடன். மாணவர்களுக்கு பள்ளியளவில் வழிகாட்டி ஆசிரியரை நியமிக்க வேண்டும். பள்ளிகளில் தலைமையாசிரியர், 2 ஆசிரியர்கள், 2 பெற்றோர்ஆசிரியர்கழக உறுப்பினர்கள், 1 எஸ்எம்சி குழு உறுப்பினர் மற்றும் 1 பணியாளரை கொண்ட மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும்.

முக்கியமாக பாலியல் குற்றங்கள் தொடர்பாக புகார்கள் வந்தால் காவல் துறைக்கு உடனே தகவல் தெரிவிப்பதுடன், உடற்கல்வி பாடவேளைகளில் கட்டாயம் மாணவர்கள் விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதை உறுதிசெய்ய வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்களை கொண்ட மகிழ் முற்றம் குழுக்களை அமைக்க வேண்டும்.

பள்ளிகளில் சாதிய பிரச்சினைகளை கண்காணிக்க மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும் என்பன உட்பட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாக பின்பற்றி பள்ளிகளில்ய சாதி வன்முறைகள் நிகழ்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கஞ்சா விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஜூன் 29

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைச் சேர்ந்த பரமசிவன் மகன் கண்ணன் (வயது 23), சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது திசையன்விளை போலீஸ் இன்ஸ்பெக்டர் சீதாலெட்சுமி குண்டர்தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், கண்ணன் குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் இன்று பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# தேவர்குளத்தில் பெண்ணை அவதூறாக பேசிய வழக்கில் தலைமறைவானவர் கைது




திருநெல்வேலி ஜூன் 29

திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளம் பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு ஒரு பெண்ணை அவதூறாக பேசிய வழக்கில் தடியம்பட்டியை சேர்ந்த கருப்பசாமி (வயது 42), கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தார். இவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 5 மாதங்களாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால், அவருக்கு திருநெல்வேலி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து கருப்பசாமியை தேவர்குளம் போலீசார் தேடி வந்த நிலையில் இன்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

29.6.2025

# போடி சார்பதிவாளர் அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்ட பூமி பூஜை



போடி சார்பதிவாளர் அலுவலகத்துக்குரூ.2.39 கோடியில் புதிய கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தேனி மாவட்டம், போடி பேருந்து நிலையம் அருகே சார்பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்டடம் தற்போது, சேதமடைந்து காணப்படுகிறது. இந்தக் கட்டடத்தை சீரமைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, சார்பதிவாளர் அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்டுவதற்குதமிழகஅரசுரூ.2.39 கோடி நிதி ஒதுக்கியது. இந்த நிலையில், புதிய கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.இதைதேனிதொகுதி மக்களவை உறுப்பினர் தங்க.தமிழ்ச்செல்வன் தொடங்கிவைத்தார். இதில் போடி நகர்மன்றத் தலைவி ராஜராஜேஸ்வரி சங்கர், நகர்மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், பதிவுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

# தேனி: திமுக கவுன்சிலர் மீது எஸ்சி/எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு; பின்னணி என்ன?

தேனி மாவட்டம், அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றி வருபவர் ராமசாமி.

திமுகவைச் சேர்ந்த தேனி வடக்கு நகர பொறுப்பாளரும், தேனி அல்லிநகரம் நகராட்சி நகர் மன்றத் தலைவர் ரேணுபிரியாவின் கணவரும், அல்லிநகரம் நகராட்சி 20வது வார்டு நகர் மன்ற உறுப்பினருமான பாலமுருகன் என்பவர் தன்னை சாதிப் பெயரைச் சொல்லி திட்டி, அடிக்க முற்பட்டு, கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அவரை எஸ்சி/எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்றும் ராமசாமி தேனி நகர் காவல் நிலையத்தில் புகாரளித்தார்.



அந்த புகாரில், "ஜூன் 24ம் தேதி நகராட்சி ஆணையாளருடன் வரி வசூல் பணியில் இருந்தபோது பாலமுருகன் தனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாரஸ்ட் ரோட்டில் உள்ள திமுக கட்சி அலுவலகத்திற்கு உடனே வரும்படி அழைத்தார்.

அங்கு சென்றபோது, 'பழைய பேருந்து நிலையத்தில் இருக்கிற இரண்டு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தை எடுக்கச் சொல்லி தீர்மானம் போட்டு 6 மாசம் ஆகிறது ஏன் இன்னும் எடுக்கவில்லை' எனக் கேட்டார்.

இரண்டு முறை நோட்டீஸ் அனுப்பி உள்ளோம் இன்னும் அவர்கள் எடுக்கவில்லை என்று சொன்னதற்கு பாலமுருகன்வ் 'நீயும் நகராட்சி ஆணையாளரும் நான் சொல்வதைக் கேட்கமாட்டீர்களா?' என ஒருமையில் சாதிப் பெயரைச் சொல்லி அருவருப்பான வார்த்தைகளால் திட்டி பேசி கொலை மிரட்டல் விடுத்தார்" என்று புகாரில் தெரிவித்திருந்தார்.

இந்த புகாரின் பேரில் தேனி நகர் காவல்துறையினர் திமுக நகராட்சி கவுன்சிலர் பாலமுருகன் மீது எஸ்சி/எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டம்உட்பட5பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்

# கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தற்காலிக தடை.. ஏன் தெரியுமா?





திண்டுக்கல்: மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் பல்வேறு பகுதிகளில் யானைகள் முகாமிட்டுள்ளதால் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சுற்றுலா என்றாலே முதலில் நினைவுக்கு வருவது ஊட்டியும், கொடைக்கானலும் தான். ஊட்டிக்கு அடுத்தபடியாக கொடைக்கானல் மிகப் பெரிய சர்வதேச சுற்றுலா தலமாக உள்ளது. சமவெளிப் பகுதிகளில் கடும் வெயில் நிலவுவதால், கொடைக்கானல் பகுதியில் நிலவும் இதமான சூழலை அனுபவிப்பதற்காக கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் படையெடுக்கிறார்கள். அதிலும் விடுமுறை நாட்களில் கடுமையான கூட்டம் நிலவுகிறது.

திண்டுக்கல்மாவட்டத்தில்அமைந்துள்ளகொடைக்கானலுக்கு தினந்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று பச்சை போர்வை போர்த்தியது போன்றும், காண்போரின் கண்ணை குளிரவைக்கும் வகையிலும்அமைந்துள்ளஎழில்கொஞ்சும்இயற்கை அமைப்பை கொண்டதாகும். இதனால், வெளியூர், வெளிமாவட்டங்கள், மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கம். இந்நிலையில், கொடைக்கானலில் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் யானைகள் நடமாட்டம் அதிகளவில் இருப்பதால் சுற்றுலாப் பயணிகல் செல்ல தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பேரிஜம் ஏரி பகுதியில் முகாமிட்டிருந்த யானைகள் தற்போது சுற்றுலா தலங்களுக்குச் செல்லும் முக்கிய சாலைகளில் முகாமிட்டுள்ளன. வனத் துறையினர் யானைகளைக் கண்காணிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புகருதி பில்லர்ராக், குணா குகை, பைன்பாரஸ்ட், மோயர் பாயிண்ட், பேரிஜம் ஏரி ஆகிய இடங்களுக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நலன் கருதியே சுற்றுலா தலங்களுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவனத்துறைதெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (29.6.2025)

**மேஷம்**: திரிபுஷ்கர யோகம், அமிர்த யோகம்போன்றஇருசக்திவாய்ந்த யோகங்கள் உங்கள் ராசிக்குள் இருந்து பல நேர்மறை வாய்ப்புகளைஉருவாக்குகின்றன—புதிய அறிவு, நல்ல செய்தி, பண வருமானம் மீளீடு போன்றன.

**ரிஷபம்**: பணம் மற்றும் உடல்நலத்தைப் பற்றி சில சிக்கல்கள் உருவாகலாம்; எச்சரிக்கையாக இருந்து மாற்று உத்திகள் தேடக் கூடும் .

**மிதுனம்**: நல்ல செய்திகள் மற்றும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வருகிறது, முழுமையாக நலம்பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கலாம் .

**கடகம்**: சந்திராஷ்டமம் காரணமாக இன்று மேலும் கவனம் தேவை. ஆனால் சில நேர்மறை முன்னேற்றங்கள், சமூக புகழ் போன்ற வாய்ப்புகள் உண்டு .

**சிம்மம்**: நிதான மென தயாராக இருப்பது முக்கியம். ஆக்கப்பூர்வமான வேலையில் ஈடுபடுங்கள்; இதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**கன்னி**: உடல் நலமும் பணமும் தொடர்புடைய சிக்கல்களை எதிர்கொள்வீர்கள். தினசரி மாற்றங்களை நிதானமாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் .

**துலாம்**: வேலை, சொத்து, குடும்ப உறவுகளில் சிறந்த முன்னேற்றத்தை அனுபவிப்பீர்கள். ஆனால் ஜூன் 20ந் வரை ஏற்படக்கூடிய ஷடாஷ்டக யோகத்தின் காரணமாக சொருக்கை மதிப்பீடு செய்யவும்.

**விருச்சிகம்**: வேலை மற்றும் சொத்து தொடர்பில் முன்னேற்றங்கள் இருக்கும். ஆனால் ஜூன் 20ம் தேதி உருவாகவுள்ளயோகத்தைமுன்கூட்டியே கவனத்தில் கொள்ளவும்,

**தனுசு**: மிகப் பலமான ஆற்றலுடன் செயல்படுகிறார். ஆனால் செலவுகளை கவனமாக திட்டமிடுவது முக்கியம் .

**மகரம்**: வேலை, சொத்து, குடும்பம்—ALL AREAS காணப்படும் முன்னேற்றங்கள் இன்றைக்கு உங்களுக்கு கிடைக்கும்,

**கும்பம்**: முக்கியமான பணிகளை இன்று நிறைவேற்ற திறன் உங்களுக்கு உள்ளது,

**மீனம்**: சொத்து வாங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு, ஆனால் திட்டமிட்ட அணுகுமுறை மட்டுமே முன்னேற்றத்துக்கு வழியளிக்கும்.

# பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு சாதனையாளர் விருது



பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது

2024–2025 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேனி மாவட்ட அளவில் முதல் இடம் பெற்ற பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி பரணி மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்டத்தில் மூன்றாவது இடம் பெற்ற ரிபானா சாகிப் ஆகியோருக்கு சாதனையாளர் விருது வழங்கும் விழா கோட்டூர் ஹீரோ ஸ்டார் நண்பர்கள் கூட்டமைப்பு (பதிவு எண் 17/2016) சார்பில் நடைபெற்றது.

பள்ளி தலைமை ஆசிரியை முனி ரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராக Enviro Trend Setter (Total Water Waste Water Solution) நிறுவனத்தைச் சேர்ந்த V. பழனிராஜா B.E அவர்கள் விருதுகளை வழங்கினார். ஊக்கத்தொகையை சமூக சேவகர் M. தமிழ் கருப்பசாமி அவர்கள் வழங்கினார். விரிவுரையாளர் P. வேல்முருகன் அவர்கள் மாணவிகளை வாழ்த்தி உரையாற்றினார்.

நிகழ்ச்சியை லிலின் ஒருங்கிணைக்க, ஹீரோஸ்டார்நண்பர்கள் கூட்டமைப்பு தலைவர் உடற்கல்வி இயக்குனர் ஹீரோ ஸ்டார் ராஜதுரை சிறப்பாக ஏற்பாடு செய்தார்.

# பாகிஸ்தான் நடிகை நடித்ததால் தடைசெய்யப்பட்ட பஞ்சாபி திரைப்படம்







அமர் ஹுண்டல் இயக்கிய இந்தப் படத்தில் பஞ்சாபி நடிகர் தில்ஜித் தோசன்ஜ் நடித்துள்ளார். இவரது அமர் சிங் சம்கீலா படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. சர்தார் ஜி 3 படத்தில் நடிகைகள் நீரு பஜ்வா, ஜாஸ்மின் பஜ்வா, ஹனியா ஆமிர் நடித்துள்ளார்கள். இதில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹனியா ஆமீர் இந்தியா, பாகிஸ்தான் போரின்போது ஆபரேஷன் சிந்தூரரை இழிவுப்படுத்தி தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டிருந்தார். ஏற்கெனவே, பாகிஸ்தான் பிரபலங்களின் இன்ஸ்டா பக்கங்களை இந்தியாவில் இருந்து முடக்கியிருந்தார்கள். இருப்பினும் அவரது இந்தப் பேச்சு மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்தப் பதிவினால் இந்திய திரைப்பட தொழிலாளர்கள் சங்கள் பாகிஸ்தான் நாட்டு கலைஞர்களை இந்திய சினிமாக்களில் நடிக்க தடை விதித்தது. சர்தார் ஜி 3 திரைப்படம் இன்று திரைக்கு வந்திருக்க வேண்டியது. பாகிஸ்தான் நடிகை பேசியதால் அந்தப் படம் வெளிநாடுகளில் மட்டுமே திரையிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளர் பேசுகையில், "அரசு இது குறித்து எதுவும் கூறவில்லை. ஆனால், மக்களின் மனம் புண்படுமென்பதால் நாங்கள் இந்தியாவில் ரிலீஸ் செய்யவில்லை. டிரைலரைக் கூட யூடியூபில் வெளிவிடவில்லை. நடிகை சிந்தித்து பேசியிருக்க வேண்டும். இதனால் எங்களுக்கு 40 சதவிகிதம் இழப்பு ஏற்பட்டுள்ளது" என்றார்.

.நடிகர் தில்ஜித் தோசன்ஜ், "நாங்கள் பிப்ரவரியில் இந்தப் படத்தின் படப்பிடிப்பை நடத்தினோம். அப்போது, எந்தப் பிரச்னையும் இல்லை. வெளிநாடுகளில் படத்தை வெளியிட தயாரிப்பாளருக்கு உதவுகிறேன். ஹனியா ஆமிர் தொழில்முறையில் சிறப்பான நடிகை. நான் கூச்ச சுபாவம் கொண்டவன் என்பதால் யாருடனும் பெரிதாக கலந்து பேசுவதில்லை" என்றார். இந்தப் படத்தில் நடித்த நடிகை நீரு பஜ்வா தனது சமூக வலைதள பக்கங்களில் இந்தப் படத்தின் சம்பந்தப்பட்ட அனைத்து பதிவுகளையும் நீக்கியுள்ளார்.

# மகளின் திருமண அழைப்பிதழ் கொடுக்க சென்ற கிங்காங்கிற்கு புதுப்பட வாய்ப்பு வழங்கிய டி.ராஜேந்தர்



தமிழ் சினிமாவில் நகைச்சுவைக்குப் பெயர் போனவர் நடிகர் கிங்காங். சங்கர் என்ற இயற்பெயர் கொண்ட இவர், நடிகர் ரஜினிகாந்தின் 'அதிசயபிறவி' படம் மூலம் நகைச்சுவை நடிகராக அறிமுகமானார். கவுண்டமணி, செந்தில், வடிவேலு, விவேக் உள்ளிட்ட பலருடன் நகைச்சுவை நடிகராக நடித்துள்ளார் கிங்காங். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு உட்பட ஐந்து மொழிகளில் 300க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார் கிங்காங்.

இவருக்குத் திருமணமாகி கலா என்ற மனைவியும், இரண்டு மகள்களும், மகன் ஒருவரும் உள்ளனர். இவரின் மகளுக்கு வரும் ஜூலை 10ம் தேதி சென்னை அசோக் பில்லர் பகுதியில் இருக்கும் மஹாலில் திருமணம் நடைபெறுகிறது. இதையொட்டி நடிகர் கிங்காங், திரையுலகில் இருப்பவர்கள், அரசியல் பிரபலங்கள் உள்ளிட்ட பலருக்கும் திருமண அழைப்பிதழ் வைத்து வருகிறார்.

இந்நிலையில் இயக்குநர், நடிகர், இசையமைப்பாளர் எனப் பன்முகத்தன்மை கொண்ட டி.ராஜேந்திரனுக்குத் திருமண அழைப்பிதழ் கொடுக்க அவரது வீட்டிற்குச் சென்றிருக்கிறார். அப்போது திருமண அழைப்பிதழைப் பெற்றுக் கொண்ட டி.ராஜேந்திரன், "உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீங்கள் என் படத்தில் நடித்ததில்லை. நான் படம் ஒண்ணு ஆரம்பிக்கிறேன்.அதுல சின்ன கதாப்பாத்திரம் ஒண்ணு இருக்கு. அதுல நீங்க நடிக்கணும்" என்று தனது படத்தில் நடிக்கும் வாய்ப்பைக் கொடுத்தார். இதுகுறித்த காணொலியை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்திருக்கும் நடிகர் கிங்காங், "மகள் திருமண பத்திரிக்கை கொடுக்க சென்ற எனக்கு, புதுப்பட வாய்ப்பைக் கொடுத்தார் இயக்குநர் டி.ராஜேந்தர்.எனது மகள் கீர்த்தனா திருமண பத்திரிக்கையை இயக்குனர் டி.ராஜேந்தர் அவர்களிடம் அளித்தேன். பத்திரிக்கை வாங்கிக் கொண்ட டி.ஆர், தான் இயக்க உள்ள புதிய படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்பளித்தார். இரட்டை மகிழ்ச்சி" என்று நன்றி தெரிவித்துப் பதிவிட்டிருக்கிறார்.

# காளி வெங்கட் நடித்த மெட்ராஸ் மேட்னி ஓ.டி.டி ரிலீஸ் அறிவிப்பு

அறிமுக இயக்குநரான கார்த்திகேயன் மணி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'மெட்ராஸ் மேட்னி'. இப்படத்தில் காளி வெங்கட், சத்யராஜ், ரோஷினி ஹரிபிரியன், ஷெலி மற்றும் விஷ்வா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்துக்கு கே.சி. பாலசரங்கன் இசையமைத்துள்ளார்.

இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் வழங்க மெட்ராஸ் மோஷன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. 'மெட்ராஸ் மேட்னி' படத்தின் 'என்னடா பொழப்பு இது' எனத்தொடங்கும் பாடலை நடிகர் வடிவேலு பாடியுள்ளார். 'மெட்ராஸ் மேட்னி' திரைப்படம் கடந்த 6ம் தேதி வெளியானது. திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. படத்தை பார்த்த பல திரைப்பிரபலங்கள் படத்தையும் படக்குழுவையும் பாராட்டினர்.

இந்நிலையில் 'மெட்ராஸ் மேட்னி' படத்தின் ஓ.டி.டி ரிலீசை படக்குழு அறிவித்துள்ளது. திரைப்படம் வரும் ஜூலை 4 ம் தேதி டென்ட்கொட்டா ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

# ஹாம்பர்க் ஓபன் டென்னிஸ்: ஸ்வியாடெக் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



ஜெர்மனியில் உள்ள பேட் ஹாம்பர்க் நகரில் ஹாம்பர்க் டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இத்தாலி வீராங்கனை ஜாஸ்மின் பயோலினி மற்றும் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஸ்வியாடெக் 61, 63 என்ற செட் கணக்கில் பயோலினியை எளிதாக வீழ்த்தி இறுதிப்போட்டி தகுதி பெற்றார்.

# முதல் டெஸ்ட்: ஜிம்பாப்வே தென் ஆப்பிரிக்கா அணிகள் இன்று மோதல்



நடப்பு உலக டெஸ்ட் சாம்பியனான தென் ஆப்பிரிக்க அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது .இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி புலவாயோவில் நாளை தொடங்க உள்ளது.

தென் ஆப்பிரிக்க டெஸ்ட் அணியின் வழக்கமான கேப்டனான டெம்பாபவுமாகாயம்காரணமாக இந்த தொடரிலிருந்து விலகியுள்ளார். எனவே இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணியின் புதிய கேப்டனாக கேஷவ் மகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜிம்பாப்வே அணியின் கேப்டனாக கிரேக் எர்வின் செயல்பட உள்ளார். இந்திய நேரப்படி நாளை மதியம் 1.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது .

# ஆஸி.கேப்டன் கம்மின்சுக்கு எதிராக செய்த சைகை... வெஸ்ட் இண்டீஸ் பவுலருக்கு அபராதம் விதித்த ஐ.சி.சி.



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பார்படாசில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் கம்மின்ஸ் பேட்டிங்கை தேர்வு செய்தார்.

அதன்படி பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் முதல் இன்னிங்சில் 180 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 59 ரன்கள் அடித்தார். அபாரமாக பந்துவீசிய வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 5 விக்கெட்டுகளும், ஷமர் ஜோசப் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி முதல் இன்னிங்சில் 190 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அந்த அணியில் அதிகபட்சமாக ரோஸ்டன் சேஸ் 44 ரன்களும், ஷாய் ஹோப் 48 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் ஸ்டார்க் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 10 ரன்கள் பின்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியா 2வது நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 92 ரன்கள் அடித்துள்ளது. டிராவிஸ் ஹெட் 13 ரன்களுடனும், வெப்ஸ்டர் 19 ரன்களுடனும் உள்ளனர். ஆஸ்திரேலியா இதுவரை 82 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

3வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

முன்னதாக இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்சின்போது கேப்டன் கம்மின்சின் விக்கெட்டை வெஸ்ட் இண்டீஸ் வேகப்பந்து வீச்சாளர் ஜெய்டன் சீல்ஸ் வீழ்த்தினார். விக்கெட் வீழ்த்தியவுடன் கம்மின்சை நோக்கி டிரெஸ்சிங் ரூம் அங்கிருக்கிறது என்ற வகையில் சைகை செய்தார். இதனால் கம்மின்ஸ் அதிருப்தியுடன் சென்றார்.

இது ஐ.சி.சி. விதிமுறைய மீறிய செயலாகும். இது குறித்து ஐ.சி.சி. விசாரணை மேற்கொண்டது. விசாரணையில் ஜெய்டன் சீல்சின் இந்த செயல் ஐ.சி.சி. நடத்தை விதிகளின் பிரிவு 2.5 ஐ மீறியதாகக் கண்டறியப்பட்டது.

இந்நிலையில் ஜெய்டன் சீல்சுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதமும் ஒரு தகுதி இழப்பு புள்ளியும் தண்டனையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.